7th March 1968]

தாரமங்கலம் மருத்துவச்சாலை

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுச் சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சேலம் மாவட்ட தாரமங்கலம் மருத்துவச்சாலை மருத்துவர் யாரும் இல்லாமல் இயங்கி வருகிறதா ?

(இ) ஆமெனில், எப்பொழுது மருத்துவர் நியமிக்கப்படுவார்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் இல்லாமல் போவது இப்போது சர்வ சாதாரணமாகிவிட்டது. நான் ஜில்லா போர்டு தலைவராக இருந்தபோது 45 ஆஸ்பத்திரிகளை நிர்வகித்து வந்திருக்கிறேன். அடிக்கடி டாக்டர்கள் லீவு போட்டுவிட்டோ, ராஜினுமா செய்துவிட்டோ, அதிகமாக சம்பாதிக்கவென்று வெளியே போய்விடுகிறார்கள். டிபார்ட்மெண்டிற்கு எழுதிக் கேட்டால் டாக்டர்கள் போட்டிருக்கிறோம் என்று தான் சொல்லிக் கொண்டிருப்பார்கள். இந்த ராஜ்யத்தில் 40, 50 ஆஸ்பத்திரிகள் வரை இல்லை என்பதை மூடி மறைத்துக் கொண்டிருக்கிறார்கள். டாக்டருக்குப் படித்து நிறைய பேர் வேலைக்கு காத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது டாக்டர்கள் இல்லாத ஆஸ்பத்திரிகளுக்கு, அவர்களை வேலையில் அமர்த்த அமைச்சர் ஏற்பாடு செய்வாரா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : உறுப்பினர் அவர்கள் தகவல் கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்க ஒத்தாசையாக இருக்கும். நிச்சயமாக டாக்டர்கள் எங்கெங்கே இல்லையோ அங்கெல்லாம் டாக்டர்கள் போட நடவடிக்கை எடுக்கப்படும்.

Pennathur T. B. Sanatorium

*** 207 *Q*.—THIRU N.R.THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—**

(*a*) whether it is a fact that patients are not admitted into the T.B. Sanatorium, which is situated 5 miles away from Vellore, due to lack of water facility; and

(*b*) the steps taken by the Government of Madras thereon ?

பெண்ணாத்தூர் காசநோய் விடுதி

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுச் சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வேலூரிலிருந்து 5 மைல் தூரத்திலுள்ள காசநோய் உடல் நலம் பெறுமிடத்திற்குத் தண்ணீர் வசதி இல்லாததால், நோயாளிகள் அனுமதிக்கப்படுவது இல்லையா ?

(இ) தண்ணீர் கஷ்டம் தீரத் தமிழக அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) ஆம். பெண்ணாத்தூர் காசநோய் விடுதியில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டது. ஆகையால் 124 படுக்கைகள் கொண்ட விடுதியில் 43 பேர்கள் மட்டும் அனுமதிக்கப் பட்டனர்.

(இ) அந்த காசநோய் விடுதியில் உள்ள கிணறு 6 அடி அதிகமாக தோண்டப்பட்டும் வேண்டிய தண்ணீர் கிடைக்கவில்லை. ஆகையால் மேலும் ஒரு குழாய்க் கிணறு 277 அடி ஆழம் தோண்டப்பட்டு அதில் " டர்பைன் பம்பும் " இணைக்கப்பட்டது. தற்போது விடுதியின் தேவைக்குமேல் தண்ணீர் கிடைக்கிறது.

[7th March 1968

THIRU A. R. DAMODARAN: How is it possible for the Government to start sanatoria without investigating the possibilities of water-supply in the area concerned ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: It has now been made up.

MR. CHAIRMAN: It is a case of sudden disappointment.

Cycle and bullock cart taxes

*208 Q.—THIRU N.R.THIAGARAJAN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the taxation of cycles and carts was cancelled in Virudhunagar Municipality ; and

(b) the loss incurred by the Municipality thereby ?

சைக்கிள், மாட்டுவண்டி வரிகள்

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) விருதுநகர் நகர சபையில் சைகிள் வரி, மாட்டு வண்டி வரி ரத்து செய்யப்பட்டதா ?

(இ) இதன் மூலம் நகரசபைக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்படும் ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) இல்லை.

(இ) இவ்வினு எழவில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவரவர்களே, விருதுநகரில் அந்த முனிசிபாலிடியில் இத்தகைய தீர்மானம் ஒன்று நிறைவேற்றியதாக அந்த முனிசிபல் கவுன்சிலரே என்னிடம் கூறினுர். சர்க்கார் அனுமதி கொடுத்தால் சைக்கிள், வண்டிகளுக்கு வரி வசூலிக்க மாட்டோம். சர்க்காரிடம் அனுமதி வாங்கிக் கொடுக்க மாட்டீர்களா என்று கேட்டார். தீர்மானம் இதுவரை நிறைவேற்றியிருக்காவிட்டாலும், இனி மேல் நிறைவேற்றி அனுப்பினுல் அரசாங்கம் பரிசீலிக்குமா ? அனுமதி கொடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: இது போன்ற வரிகளை வசூலிக்க வேண்டுமென்று மிகமிக முந்திய காலத்தில் நிர்ணயிக்கப்பட்டது. அவருக்கு மிக நெருங்கிய அரசாங்கத்திடமே இதைக் கேட்டு தள்ளுபடி செய்திருக்கக் கூடும். ஆனுல் தள்ளாமல் இருக்கக் காரணம் இதைத் தள்ளிவிட்டால் நகராட்சி மன்றம் நல்ல முறையில் இயங்க முடியாது என்பதனுல் தான் அவர்களே தள்ளாமல் இருந்திருக்கிறுர்கள். இந்த அரசாங்கம் அதைத் தள்ளுகிற உத்தேசமில்லை.

Collection of Panchayat Tax in Cheevalapperi Village.

*209 Q.—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether Panchayat tax is collected now in lumpsum which was not collected for the past 10 years at Cheevalapperi of Tirunelveli District ; and

(b) whether the Act admits collection of arrears of tax due for over three years ?